வளசரவாக்கம் மண்டலத்தில் தினசரி 31 மருத்துவ முகாம்கள்: அமைச்சர் விஜயபாஸ்கர் தகவல்

சென்னை, ஜூன் 17–

வளசரவாக்கம் மண்டலத்தில் தினசரி 31 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது என்று அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கூறினார்.

சென்னை வளசரவாக்கம் மண்டல (11வது மண்டலம்) அலுவலக வளாகத்தில், கொரோனா தொற்று நோயினை கட்டுப்படுத்திட மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆய்வு மேற்கொண்டார். ஊரகத் தொழில்துறை அமைச்சர் பி.பெஞ்சமின் ஏற்பாட்டில், கண்காணிப்பு அலுவலர் வெங்கடேசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், முன்னாள் அமைச்சர், துணை ஆணையர் முத்துசாமி, துணை ஆணையர் ஜெயராமன் லியாத் உதின் மற்றும் சுகாதாரத்துறை, காவல் துறை, நகராட்சி நிர்வாகம் தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, அம்மண்டலத்தில் அம்மா உணவகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அரிசி, பருப்பு மற்றும் சேலை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அமைச்சர்கள் வழங்கினார்கள். பின்னர், ஆலப்பாக்கம் மீனாட்சியம்மாள் பல் மருத்துவமனையில் கொரோனா தொற்று உள்ள 200 நபர்களை தங்கவைத்திட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பார்வையிட்டார். மேலும், 147வது வட்டம் தேவி கருமாரியம்மன் தெருவில் உள்ள மருத்துவ முகாமினை பார்வையிட்டு, 143வது வட்டம் நொளம்பூர், மார்க் கிரிகோரியஸ் கல்லூரியில் நோய் தொற்று அறிகுறியுடன் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிட்டு, அதே பகுதியில் 200க்கும் மேற்பட்ட துப்புரவாளர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

வீடுகளில் கண்காணிப்பு

செய்தியாளர் சந்திப்பில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்ததாவது:–

வளசரவாக்கம் மண்டலத்தில் நாளது வரையில், 4,327 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதில் 1,385 நபர்களுக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 827 நபர்கள் நோயிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மேலும், 120 நபர்கள் தங்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

கொரோனா சிறப்பு மையங்களில் 248 நபர்களும், மருத்துவமனைகளில் 168 நபர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை, பாதுகாப்பு நடவடிக்கையாக ஏறத்தாழ 2 லட்சத்து 15 ஆயிரம் முக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கபசுர குடிநீர் 50 கிராம் அடங்கிய 54,200 பாக்கட்டுகளும் வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, நிகழ்விடத்திலேயே தயார் செய்யப்பட்டும் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ முகாம்கள்

அதே போன்று, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரண்டு கல்லூரிகளில் 300 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை கண்காணிப்பதற்கு 10 நபர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளோம். நாளது வரையில், 235 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனை மேலும் விரிவுப்படுத்திடும் பொருட்டு, தினந்தோறும் இந்த வளசரவாக்கம் மண்டலத்தில் மட்டும் 31 மருத்துவ முகாம்கள் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அறிவித்த 12 நாள் முழு ஊரடங்கினை முழுமையாக செயல்படுத்தி, கொரோனா பரவலை முழுமையாக தடுத்திட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், காவல்துறையினர் குறைந்த அளவிலான தெருக்களை ஆய்வு அரண்கள் அமைத்து கண்காணித்திட வேண்டும். பொதுமக்கள் அதிக அளவில் வெளியில் நடமாடுவதை முழுமையாக தடுத்திடல் வேண்டும்.

பொது மக்கள் அத்தியாவசிய மற்றும் மருத்துவத் தேவைகளுக்காக மட்டுமே வெளியில் வர வேண்டும் என்பதை காவல்துறையினர் வாயிலாக அறியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த மண்டலத்தில் 2,885 நபர்கள் பராமரிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேவைக்கு ஏற்ப புதிய ஆட்களை தேர்வு செய்து கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் துறை மூலமாக கிருமி நாசினிகள், சானிடைசர், தெளிப்பான் வாகனங்கள், முகக்கவசங்கள் மற்றும் கையுறைகள் போன்றவை தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக தேவைப்பட்டால், அதனை முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று வழங்கிட ஆவன செய்யப்படும். இந்த மண்டலத்தில் நோய் பரவலை முழுமையாக கட்டுக்குள் கொண்டு வர தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

வெளியில் சுற்றாதீர்கள்

முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளியினை கடைபிடித்தல் போன்ற விழிப்புணர்வினை மக்களிடம் ஏற்படுத்தினால் மட்டுமே இந்நோய் தாக்கத்தினை கட்டுக்குள் கொண்டுவர இயலும். இதற்காக, பிரச்சார வாகனங்கள் வாயிலாக கள விளம்பரப் பணியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளைஞர்கள் இருசக்கர வாகனங்களில் சுற்றுவதை குறைக்க வேண்டும். இந்த 12 நாட்கள் முழு ஊரடங்கினை பொதுமக்கள் முழுமையாக கடைபிடித்து சென்னையில் நோய் தொற்று பரவுதலை குறைத்திட தங்களின் ஒத்துழைப்பினை நல்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

கேள்வி: போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு கொரோனா தொற்று பரவி வருவது குறித்தும், செய்யாறு பணிமனை மூடப்பட்டுள்ளது குறித்தும்?

அமைச்சர்: போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு தேவையான முகக்கவசங்கள், சானிடைசர்கள் மற்றும் கையுறைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, இந்த ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட காவல் துறை அதிகாரிகளான உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியோருக்கு கொரோனா நோய் தொற்று உறுதி செய்யப்பட்டு, மருத்துவமனையில் உரிய சிகிச்சை பெற்று மீண்டும் பணிக்கு திரும்பியுள்ளனர். நோய் தொற்று ஏற்பட்டுள்ள போக்குவரத்துக் கழக ஓட்டுநர், நடத்துநர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

வடகொரியாவுக்கு தென்கொரியா கடும் எச்சரிக்கை

சியோல், ஜூன் 17–

வடகொரிய எல்லையில் இரு நாட்டுக்கு பொதுவான அலுவலகத்தை கிம் ஜாங் அரசு தகர்த்த நிலையில், தென் கொரியா ராணுவ டாங்கிகளை எல்லையில் குவித்துள்ளது.

கொரோனா பரவலை அடுத்து பராமரிப்பின்றி காணப்பட்ட இரு நாட்டுக்கும் இடையேயான தொடர்பு அலுவலகத்தை வடகொரியா வெடிவைத்து தகர்த்துள்ளது.

சமீப நாட்களாக வடகொரியா தென் கொரியாவை கடுமையாக மிரட்டி வந்ததுடன், இரு நாட்டுக்கும் பொதுவாக 2018–ம் ஆண்டு நிறுவப்பட்ட தொடர்பு அலுவலகத்தை தகர்க்க இருப்பதாகவும் மிரட்டியது. மேலும், தென் கொரியாவுடன் இனி எந்த உறவும் இல்லை எனவும், எதிரி நாடாகவே பார்க்கப்படும் எனவும் கிம் ஜாங் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதனிடையே, தென் கொரியா எல்லை மீறிச் செல்வதாகவும், தங்கள் ராணுவத்திடம் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை அளித்துள்ளதாகவும் கிம் ஜாங் சகோதரி 2 நாட்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே எல்லையில் அமைந்துள்ள அலுவலகம் தகர்க்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்திற்கு பின்னரே தென் கொரியா எல்லையில் ராணுவ டாங்கிகளை குவித்துள்ளன.

மட்டுமின்றி எல்லையில் ரோந்து நடவடிக்கைகளையும் அதிகப்படுத்தியுள்ளது தென் கொரியா. அலுவலகம் தகர்க்கப்பட்ட பின்னர் தென் கொரிய அரசாங்கம் ஜனாதிபதி மாளிகையான ப்ளூ ஹவுஸ் மற்றும் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தை நடத்தியது.

இனி மேலும் பிராந்தியத்தின் அமைதியை சீர்குலைக்கும் வகையில் வடகொரியா நடந்துகொண்டால், தங்களின் பதிலடி மிகவும் மோசமாக இருக்கும் என அதிகாரிகள் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடமையில் அசாத்திய துணிச்சல்: வீரர்களுக்கு ராஜ்நாத்சிங் பாராட்டு

புதுடெல்லி, ஜூன் 17–

கல்வான்பகுதியில்நடந்தமோதலில் இந்திய வீரர்களின் வீரமரணம் மிகுந்த வேதனை அளிக்கிறது. பெருத்த வலி ஏற்படுகிறது. நம் வீரர்கள் அசாத்திய துணிச்சலையும், வீரத்தையும் காட்டி, இந்திய ராணுவத்தின் உயர் பாரம்பரியத்துக்கேற்ப தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள் என்று ட்விட்டரில் பதிவு செய்துள்ளார்.

'வீரர்களின் வீரத்தையும் தியாகத்தையும் இந்திய நாடு மறக்காது. வீரமரணம் அடைந்த வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் நினைவு தான் எனக்கு. இந்தத் துயரமான வேதனையான நேரத்தில் அவர்களின் குடும்பத்தோடு துணை நிற்கிறது நாடு.

வீரமரணம் அடைந்திருக்கும் வீரர்களின் வீரம் துணிச்சலைக் கண்டு இந்தியத் திருநாடே பெருமிதம் அடைகிறது...' என்றும் அதில் பதிவிட்டுள்ளார்.

தயார் நிலையில் இந்திய முப்படைகள்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி பயன்படுத்தப்படவில்லை. கைகளை கொண்டு மோதலில் இரு ராணுவத்தினரும் ஈடுபட்டனர். கற்களை ஒருவருக்கு ஒருவர் மீது விசியும், கைகளால் குத்தியும் மோதல் நடந்தது. சீன வீரர்கள், இரும்பு கம்பிகள் உள்ளிட்டஆயுதங்கள் மூலம் தாக்கனர். சுமார் 4 மணி நேரம் இந்த மோதல் நீடித்ததாக கூறியுள்ளது. இந்த மோதலை சீன பாதுகாப்பு அமைச்சகமும் உறுதி செய்தது.

45 சீன வீரர்கள் பலி

சீனா தரப்பில் 45 வீரர்கள் உயிரிழந்திருப்பதாக ஒரு தகவல் வெளியானது. அதிகளவு ஆம்புலன்ஸ், ஸ்ட்ரெச்சர்கள், ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. இதனடிப்படையில் அந்நாட்டிற்கு அதிக பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளது. எத்தனை பேர் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என உறுதியாக கூற முடியாது. இந்த மோதலில் சீன தரப்பின் ராணுவத்தின் கமாண்டிங் அலுவலரும் உயிரிழந்ததாக தெரிகிறது. ஆனால் சீன தரப்பில் உயிரிழப்பு குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

எல்லைகளில் கண்காணிப்பு: ராஜ்நாத் சிங் ஆலோசனை

தொடர்ந்து எல்லையில் பதற்றம் நிலவுவதை அடுத்து, முப்படை தலைமைத் தளபதி, முப்படை தளபதிகள், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோருடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இன்று மீண்டும் தீவிர ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனைக் கூட்டத்தில், சீன எல்லை மட்டுமல்லாமல் பிற எல்லைகளிலும் கண்காணிப்பை பலப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ராஜ்நாத்சிங் அறிவுறுத்தினார். மேலும், எல்லையில் முப்படைகளும் தயார் நிலையில் இருக்கவும், பாதுகாப்பை பலப்படுத்தவும், தேவையான இடங்களுக்கு கூடுதல் வீரர்களை அனுப்பவும் அவர் உத்தரவிட்டார்.

மோடியிடம் விளக்கம்

முன்னதாக நேற்று முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், முப்படைகளின் தளபதிகளுடன், ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், நேற்று ஆலோசனை நடத்தினார். வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரும் இக்கூட்டத்தில் பங்கேற்றார். அதன்பின், எல்லையில் நடந்த சம்பவங்கள் மற்றும் அங்குள்ள நிலைமை குறித்தும், பிரதமர் நரேந்திர மோடியிடம், ராஜ்நாத் சிங் விளக்கினார்.

அத்துமீறிய சீனா

இந்திய எல்லைக்குள் அத்துமீறி ஒருதலைபட்சமாக சீனா நடந்ததால், இரு நாட்டு ராணுவ வீரர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டதாக இந்தியா குற்றம் சாட்டி உள்ளது.

இதுகுறித்து செய்திதொடர்பாளர் அனுராக் ஸ்ரீவாஸ்தவா கூறியதாவது:

லடாக் நிலவரம் குறித்து, இந்தியா சீனா பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. ஜூன் 6ல் உயரதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் இரு தரப்பும் சுமூகமாக போக முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பிரச்னை சுமூகமாக முடியும் என எதிர்பார்க்கப்பட்ட சூழலில் கால்வான் பள்ளத்தாக்கில் இந்திய எல்லைக்குள் அத்துமீறிய சீனா ஒருதலைபட்சமாக நடந்தது. இதனால், இருதரப்பும் நேருக்கு நேர் மோதும் சூழல் உண்டானது. இருதரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன.

எல்லைக்கட்டுப்பாட்டை பின்பற்றி, இந்திய எல்லைக்குளேயே நமது நடவடிக்கைகள் இருந்தன என்பதில் இந்தியா தெளிவாக உள்ளது. சீன தரப்பிலிருந்தும் இதனை எதிர்பார்க்கிறோம். எல்லையில் அமைதியை பாதுகாக்க வேண்டியது அவசியம். அதே சமயம் இந்திய இறையாண்மையை பேணிப்பாதுகாப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்திய – சீன படைகள் வாபஸ்

இந்நிலையில், இந்தியா – சீனா இடையே, எல்லை பதற்றத்தை தணிக்கும் விதமாக, இருதரப்பிலும் படைகள் விலக்கிக்கொள்ளப்பட்டிருப்பதாக இந்திய ராணுவம் தகவல் தெரிவித்துள்ளது.

இரு தரப்பு ராணுவ அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து, இருநாட்டு ராணுவமும் லடாக் எல்லையில், கால்வான் பள்ளத்தாக்கு உள்ளிட்ட 3 இடங்களில் இருந்து இந்திய, சீன படைகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. அதே சமயம், பாங்காக் ஏரி, தவுலத் பெக் ஓல்டி உள்ளிட்ட இடங்களில் படைகள் வாபஸ் பெறப்படவில்லை.

இந்தியா, சீனா இடையிலான உயர்மட்ட அளவிலான உடன்படிக்கையை சீனா மீறி விட்டதாக மத்திய வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம், தனது எல்லைக்குள்ளேயே இந்தியா தனது செயல்பாட்டை மேற்கொண்டதாகவும், இந்தியாவை போலவே சீனாவும் செயல்படும் என நம்புவதாகவும் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், லடாக் எல்லை பகுதியில் இரு நாடுகளும் அமைதியை பேணுவது மிகவும் அவசியம் எனவும் லடாக் எல்லை நிலைமையை ஒருதலைபட்சமாக சீனா மாற்ற முயன்றதே பிரச்சினைக்கு காரணம் எனவும் வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமைதி திரும்ப அமெரிக்கா விருப்பம்

இந்தியா – சீனா இடையே அமைதி திரும்ப வேண்டும் என விரும்புவதாக, அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

லடாக் மோதல் சம்பவம் குறித்து ஏஎன்ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில்,

இந்தியா – சீனா எல்லைப்பிரச்னை குறித்து அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது. இந்திய தரப்பில் 20 வீரர்கள் வீர மரணம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது குடும்பங்களுக்கு எங்களது ஆழ்ந்த இரங்கல் என்று கூறினார்.

''எல்லையில் இந்திய, சீன படைகள் வாபஸ் பெறப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் அமைதி திரும்ப இருநாடுகளும் எடுக்கும் முயற்சியை அமெரிக்கா ஆதரிக்கிறது. ஜூன் 2ம் தேதி, இந்திய பிரதமர் மோடியுடன், அமெரிக்க அதிபர் டிரம்ப் தொலைபேசி மூலம் கலந்துரையாடிய போது, இந்திய சீன எல்லை நிலவரம் குறித்து விவாதித்தனர் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா பொது செயலாளர் வேதனை

ஐ.நா. பொது செயலாளர் அண்டோனியோ கட்டர்ஸ் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், இந்தியா – சீனா இடையேயான மோதல் வேதனை அளிப்பதாக உள்ளது என்று கூறி, லடாக் பகுதியில் இருந்து இரண்டு நாட்டு படைகளும் விலக்கிக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்து உள்ளார்.

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து) விதி 8–(1)

கீழே கையொப்பமிட்டுள்ள ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) (ஐஐஎச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீடுக்கச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீடுக்கச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீடுக்கச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறையின் கீழும் கடன்தாரர்கள்/ உடன்கடன்தாரர்கள் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து ஐஐஎச்எப்எல்–க்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டப்பிரிவு 13, துணைப்பிரிவு 8ன்படி கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவது யாதெனில், ''ஐஐஎச்எப்எல்''–க்கு செலுத்த வேண்டிய பாக்கித்தொகை, அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றை கடன்தாரர் விற்பனை அல்லது மாற்று நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக எப்போது கட்டினாலும் ஈடு பெற்ற ஆஸ்திகள் ஐஐஎச்எப்எல்–ஆல் விற்பனை செய்யப்படாது அல்லது மாற்றப்படாது மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்க அல்லது மாற்றும் நடவடிக்கைகளை ஐஐஎச்எப்எல் மேற்கொள்ளாது.

கடன்தாரர்(கள்) பெயர் சென்னை கிளை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்து)	செலுத்த வேண்டிய பாக்கித்தொகை (ரூ.)	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	சுவாதீன அறிவிப்பு தேதி
கலீல் மீரான் S, ஜன்னாத் பிர்தோஸ் S, ரபியாதுல் K தரி ஸ்டார் ஏஜென்சீஸ் ஜரினா பேகம் S, மேகராஜ் ஸ்டீல் கிரியேட்டர்ஸ், முகமது இஸ்மாயில் S (புராஸ்பெக்ட் எண்.741727)	சென்னை, காஞ்சீபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, ஸ்ரீபுரம் திருநீர்மலை, முதல் தெரு, மனை எண்.59, திருநீர்மலை கிராமம், சர்வே எண்.312/1பி1பி மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.32,98,823/–	10/09/2019	12/06/2020
திருமதி. சீரிஷா சந்திரசேகர் SVR எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் திரு. சந்திரசேகர் D (புராஸ்பெக்ட் எண்.793638)	தமிழ்நாடு, காஞ்சீபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, காரணை புதுச்சேரி கிராமம்,சர்வே எண்.4/7எ1,4/6எ,4/7எ2,4/2,4/3,3/5,3/3,3/4,4/4பி,3/1எ,3/2, 3/6 பகுதி, அபார்ட் மெண்ட் எண். பி206, 2வது மாடி, பிளாக் பி, ஐஸல் மரகேஷில் உள்ள கூப்பர் பில்டப் ஏரியா 1370 சதுர அடி பிளாட் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.52,37,807/–	24/02/2020	12/06/2020
சரவணக்குமார் G மற்றும் கலையரசி N மற்றும் ஸ்ரீ ரக்ஷா லெதர்ஸ் (புராஸ்பெக்ட் எண்.747009)	தமிழ்நாடு 600 044, சென்னை, பேங்க் ஆப் பரோடா, தமிழ்நாடு, இந்தியா. சென்னை 600 044, பேங்க் ஆப் பரோடா, குரோம்பேட்டை, 6வது பிரதான சாலை, நியூ காலனி, மனை எண்.20எ, துர்க்கை பிளாட்ஸ், முதல் மாடி, பிளாட் எண். D மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.41,34,904/–	09/09/2019	12/06/2020
திரு. விக்ரம் ஸ்ரீனிவாசன் திரு. ஸ்ரீனிவாசன் K மற்றும் மெசர்ஸ் சாய் டிரேடர்ஸ் (புராஸ்பெக்ட் எண்.768680)	தமிழ்நாடு, சென்னை, குன்றத்தூர், ''டெம்ப்பிள் வேவ்ஸ்'', அமர்பிரகாஷ், பிளாட் எண்.கே415, 4வது மாடி, பிளாக் எண். K, கூப்பர் பில்டப் ஏரியா 632 சதுர அடி (பொது கட்டுமான ஏரியா பிரிவுபடாத பங்கையும் உள்ளடக்கி உள்ளது) மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	ரூ.24,55,556/–	13/02/2020	12/06/2020
மகேஷ் குமார் சண்முகம் M மாதவி மெசர்ஸ் ஸ்ரீ மேனர் (புராஸ்பெக்ட் எண்.732011 & 731701)	1. சென்னை 600 101, அண்ணா நகர் மேற்கு விரிவு, மனை எண். ஏபி105 மற்றும் சென்னை 600 101, அண்ணா நகர் மேற்கு விரிவு, 3வது தெருவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் அதன் சர்வே எண்.93/2 பகுதி, 1பி பகுதி. இந்த சொத்தானது பாடி கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. 2. சென்னை 600 101, அண்ணா நகர் மேற்கு விரிவு, மனை எண்.1, சிசி 10, முதல் மாடி, பிளாட் எண்.1 மற்றும் சர்வே எண்.55/2 பகுதி, 56 பகுதி மற்றும் 57 பகுதி, டி.எஸ்.எண்.49/5/2, பிளாக் எண்.19, வார்டு எண்.1. இந்த சொத்தானது பாடி கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது.	ரூ.1,22,12,458/– & ரூ.60,54,718/–	25/09/2019	12/06/2020

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:– 10/01, 56L, 9வது மாடி, பாஸ்கான் பிபூச்சாரா டவர், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை – 600 017/அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, பேஸ்–IV, உத்யோக் விஹார், குர்கான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம் : சென்னை
தேதி : 17.06.2020

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக (IIFL HFL)

பெயர் மாற்றம்

Natarajan Palani Sathishkumar, தந்தை பெயர்: Palani, பிறந்த தேதி: 16.04.1996, எண்.6/20, வரதப்பன் தெரு, கோடம்பாக்கம், சென்னை –600 024, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PALANI SATHISHKUMAR**, என்று அழைக்கப்படுகிறேன்.

Natarajan Palani Sathishkumar

பெயர் மாற்றம்

Ilango Fernando Antoni Santiago, தந்தை பெயர்: Antoni Santiyagu, பிறந்த தேதி: 01.02.1970, எண்.157, கே ஆர் கோவில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை –600 033, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ELANGOVAN ANTONI SANTIAGO**, என்று அழைக்கப்படுகிறேன்.

Ilango Fernando Antoni Santiago

பெயர் மாற்றம்

HARSHINEE MUTHUPILLAI, பிறந்த தேதி: 22.12.2018, எண்.3–7/3A, திருமுருகன் தெரு, ஸ்ரீ வெங்கடேஷ் நகர், விருகம்பாக்கம், சென்னை –600 092, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **HARSHINEE MUTHUKUMAR**, என்று அழைக்கப்படுகிறார்.

Muthukumar,
தந்தை.

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: தபால் பெட்டி எண். 1
காமராஜ் நகர் காலனி, சேலம் 636 014
CIN : L17111TZ1973PLC000675; Ph : 0427-2240790 Fax : 0427-2240169
E-mail id : corporate@sambandam.com & cs@sambandam.com website : www.sambandam.com

அறிவிப்பு

செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 33 மற்றும் 47ன்படி, 31.03.2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகள் மற்றும் 31.03.2020ல் முடிந்த ஆண்டுக்கான கம்பெனியின் தணிக்கையான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை, 28 ஜூன், 2020 அன்று சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் மில் வளாகம், காமராஜ் நகர் காலனி, சேலம்–636 014ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டுக்காக
இடம்: சேலம் (S. தேவராஜன்)
தேதி : 16.06.2020 சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
கள்ளக்குறிச்சி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு
ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மான்ய நிதி 2019-2020
திட்டத்தின்கீழ் ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்தல்

1. முழுமையான விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி திட்ட இயக்குநரால், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் **ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மான்ய நிதி 2019-2020** திட்டத்தின்கீழ் **8** ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வா